**செய்தி வெளியீடு** எண்: 136 நாள்: – **21.2.2008**

**<u>செய்தி வெளியீடு – 21.2.2008</u>**

## <u>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக் கொண்டது.</u>

## <u>மாண்புமிகு மத்திய சமூக நீதி மற்றும் சமூகப் பாதுகாப்புத் துறை அமைச்சர் திருமதி மீராகுமார் தொலைபேசி மூலம் தெரிவித்தார்</u>

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை, அம்மாணவர்கள் ப்ளஸ்–2 தேர்வில் 60 சதவீத மதிப்பெண்கள் பெற்றிருந்தால் மட்டுமே வழங்கப்படும் என்ற மத்திய அரசின் விதிமுறையால், பல மாணவ மாணவியர்கள் கல்வி உதவித் தொகை பெற இயலாத நிலை ஏற்பட்டது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் தொழில் பட்டப்படிப்புகளில் சேர்வதற்கு ப்ளஸ்–2 தேர்வில் தேர்வு பெற்றாலே போதும் என்ற நிலையில், மத்திய அரசு விதித்த இந்த புதிய நிபந்தனையால், பல மாணவர்கள் உதவித் தொகை பெற இயலாத சூழ்நிலை ஏற்பட்டதை உணர்ந்து, கல்வி உதவித் தொகைத் திட்டத்தை (Post Matric Scholarship Scheme) பழைய விதிமுறைகளின்படியே தொடர்ந்து செயல்படுத்துமாறு மத்திய சமூக நீதி மற்றும் சமூகப் பாதுகாப்புத் துறை அமைச்சர் திருமதி மீரா குமார் அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 9.1.2008 அன்று கடிதம் எழுதினார்.

இதற்கிடையே, சட்டப்பேரவையில், இந்தப் பிரச்சினை குறித்து வினா எழுப்பப்பட்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் "மாணவர்களின் படிப்பு தடைபடாமல் தொடரும் வகையில் பிளஸ்–2 தேர்வில் தேர்வு பெற்று, தொழில் படிப்புகளில் பயின்று வரும் அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கும் மத்திய அரசின் முடிவினை எதிர்நோக்கி தொடர்ந்து கல்வி உதவித்தொகை வழங்கப்படும் என்பதையும், மத்திய அரசின் விதிமுறைகள்

**ஒருவேளை மாற்றப்படாத பட்சத்தில், இதற்கான செலவை தமிழக அரசே தனது நிதியிலிருந்து ஏற்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று பதில் அளித்தார்கள்.**

**இன்று (21.2.2008) நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், முதலமைச்சர் கலைஞர் அவர்களின் வேண்டுகோள் பரிசீலனை செய்யப்பட்டு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகைத் திட்டம் பழைய நெறிமுறைகளின்படியே தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாக முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் மாண்புமிகு மத்திய சமூக நீதி மற்றும் சமூகப் பாதுகாப்புத் துறை அமைச்சர் திருமதி மீரா குமார் அவர்கள் தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளார்கள்.**

**..................................................................................**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.